# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2106/10 - 2019 ජනවාරි මස 16 වැනි බදාදා - 2019.01.16

*2106/10 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

***அரசாங்க அறிவித்தல்கள்***

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் உப உறுப்புரையின் வண்ணம், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2018, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2103/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, 2019, சனவரி மாதம் 11 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**மைத்திரிபால சிறிசேன,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2019, சனவரி 14.*

1A - G 28936 — 387 (2019/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**(1) அவ்வறிவித்தலில் இல. (3) "பொது வழங்கல்கள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-**

(அ) அவ்வறிவித்தலில் இல. (3) "பொது வழங்கல்கள் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்" என்ற தலைப்பு மற்றும் அதன் நிரல் I, நிரல் II மற்றும் நிரல் III இன் கீழுள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஆ) அவ்வறிவித்தலில் இல. (3) எனும் தலைப்பும் அதன் நிரல் I, நிரல் II மற்றும் நிரல் III இல் உள்ள விடயங்களை கீழ்க்காணுமாறு சேர்ப்பதன்மூலம்;

**(3) பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் தொடர்பிலான விடயம் மற்றும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களத்திற்குரிய கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. உணவு ஆணையாளர் திணைக்களம் | • (1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) குடிசன மதிப்பீட்டுச் சட்டம் |
| 2. மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியைப் பேணுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் தேவையான பொருளாதார சீர்திருத்தங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் | 2. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | • (2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) 1990 சுவசெரிய மன்றச் சட்டம் |
| 3. தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சரினால் தயாரிக்கப்படும் தேசியக் கொள்கைகளுக்கேற்ப பொருளாதாரத்தினையும் தரவுகளின் மீதான பகுப்பாய்வினையும் முகாமைசெய்தல் | 3. குடும்ப பொருளாதாரக் கூறு | • இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவனச் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க) |
| 4. வாழ்க்கைச் செலவுகளைக் கண்காணித்தலும் அமைச்சரவைக்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைத்தலும் | 4. தரவுப் பகுப்பாய்வுக் கூறு | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 5. குடும்பப் பொருளாதார அலகினைக் கண்காணித்தல் | 5. 1990 சுவசெரிய மன்றம் | |
| | 6. மக்கள் வழங்கல் செயற்பாட்டுச் செயலணி | |
| | 7. கொள்கை கற்கைகள் நிறுவனம் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(3) பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 6. சுயபாதுகாப்புக்காக உணவு இருப்புகளைப் பேணுதல் | | |
| 7. கூட்டுறவு மற்றும் தனியார் பிரிவுகளுடன் இணைந்த உற்பத்திப் பெருக்கம்மிக்க பகிர்ந்தளிப்பு முறையினைத் தயாரித்தல் | | |
| 8. கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா சதொசவுடன் ஒருங்கிணைந்து பயன்மிக்க உணவு பகிர்ந்தளிப்புத் திறமுறையொன்றை நாடளாவிய ரீதியில் பாதுகாத்தல் | | |
| 9. 1990 சுவசெரிய நோயாளர் காவு வண்டிக் கருத்திட்டத்தை ஒருங்கிணைத்தல் | | |
| 10. தேசியக் கொள்கைகளை மதிப்பிடுவதற்கும் கண்காணிப்பதற்குமாகத் தொடர்புடைய தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சருக்கு உதவியளித்தல் | | |
| 11. சமூகப் பொருளாதார சிக்கல்களுக்காக அரசாங்கத்துக்கு நம்பகமான நோக்கொன்றை சமர்ப்பிப்பதற்கான கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக உயர்மட்ட சுயாதீன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் | | |
| 12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*(2)* அவ்வறிவித்தலில் இல. *(3)* “பொது வழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்” என்ற தலைப்பு மற்றும் அதன் கீழ் நிரல் I, நிரல் II மற்றும் நிரல் III ஆகியவற்றின் பின்னர் பின்வரும் புதிய தலைப்பு, நிரல் I, நிரல் II மற்றும் நிரல் III ஆகியவையும் விடயங்களையும் சேர்ப்பதன்மூலம்;

***(4)* தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. தொழில் திணைக்களம் | • ஊழியர் பேரவைகள் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) |
| 2. சர்வதேச தொழிலாளர் நியமங்கள், பதவியணி நிர்வாகம் மற்றும் நலன்புரி சம்பந்தமாக கொள்கைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும் | 2. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் | • ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் (1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) |
| 3. சர்வதேச தொழிலாளர் அமைப்பாண்மை, சர்வதேச சமூகப் பாதுகாப்பு அமைப்பாண்மை ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை பேணுதல் | 3. ஊழியர் சேமலாப நிதியம் | • (1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் வேலைக்கமர்த்துதல் சட்டம் |
| 4. ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வுறுத்தல் திட்டம் ஆகியவற்றை நிர்வகித்தல் | 4. தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அபிவிருத்திக்கான தேசிய நிறுவகம் | • தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் (1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) |
| 5. தொழில்நுட்ப உறவுகளும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தலும் | 5. தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | • கைத்தொழிற் பிணக்குகள் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) |
| 6. தொழில் உறவுகளுக்குரிய சட்டதிட்டங்களைத் தயாரித்தலும் ஒழுங்குறுத்தலும் | 6. சிரம வாசனா நிதியம் | • பிரசவ நலன்கள் கட்டளைச் சட்டம் (1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) |
| 7. தொழில்சார் மற்றும்தொழில்துறை வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | 7. மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களம் | • (2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய நிறுவகச் சட்டம் |
| | 8. வரையறுக்கப்பட்ட லங்கா ரெக்கியா பியஸ | • பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம் (1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) |
| | 9. தொழில்புரிவோர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | • சாப்புகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழிலையும் வேதனத்தையும்) விதிமுறைப்படுத்தல் சட்டம் (1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(4)* தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

8. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தலும் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் அனைத்துத் தொழிற் சங்கங்களதும் அலுவல்களை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன் படுத்தும்பொருட்டுத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதலும் முறைப் படுத்தலும்
9. தேசிய மனிதவலு மற்றும் தொழில் துறைக் கொள்கைகளைச் செயற் படுத்துதல்
10. தொழில் நிறுவனங்களினால் கட்டணங்கள் அறவிடப்படுவதை ஒழுங்குறுத்தல்
11. தொழில்வாய்ப்பின்மை நலன் காப்புறுதித் திட்டங்களுடன் தொடர் புடைய பணிகள்
12. தொழில்சார் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்
13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப் பட்டுள்ள ஏனைய சகல விடயங் களுக்குரியதான செயற்பாடுகள்
14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்*

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1998ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம்
- தொழிலாளிகளின் தொழிலை முடி வுறுத்துதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க)
- தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டம் (1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க)
- (1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க) சம்பள நிர்ணய சபைகள் கட்டளைச் சட்டம்
- தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் (1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)
- (1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) கட்டணங்களை அறவிடும் முகவராண்மைகள் சட்டம்
- (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) தொழில்புரிவோர் நம்பிக் கைப் பொறுப்பு நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) தொழில் புரிவோர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித் துரைக்கப்பட்டவையுமான விடயங் கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங் களும்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.